# *புனித அல்ரிக் (890-973)*

இவர் ஓர் ஆயரின் கீழ் உயர்ந்த பதவியில் இருந்தார். பின் அந்த நகரின் ஆயர் ஆனார். இவரது காலத்தில் விரோதிகள் வந்து நாட்டை சீரழித்து விட்டார்கள். இவர் பல கோவில்களைத் திரும்பக் கட்ட வேண்டியிருந்தது. குருக்களையும் மக்களையும் சீர்திருத்த வேண்டியிருந்தது. இதையெல்லாம் சிறந்த முறையில் செய்து முடித்தார். தூய வாழ்வினாலும், குருக்களை அடிக்கடி திரட்டி அவர்களுக்கு போதித்தும், மக்களைக் கலந்து ஆலோசித்தும் பல அரிய காரியங்களைச் சாதித்தார். திருச்சபைச் சட்டங்களை யாராவது மீறியிருந்தால் அவர்களை நாம் ஆயர் வன்மையுடனும் அன்புடனும் கண்டிப்பார். இவர் மக்களின் ஆன்ம நலனை மாத்திரம் அல்ல, ஆனால் இவ்வுலக நலன்களையும் கண்காணித்து வந்தார். ஏழைகளுக்கும், அகதிகளுக்கும் உதவி செய்தார். எதிரிகள் திரும்பவும் படையெடுத்தார்கள். பட்டணத்தைக் காத்த வீரர்களை இவர் ஊக்குவித்து அவர்கள் வெற்றி பெறச் செய்தார்.

**சிந்தனை:**

அரும்பெரும் காரியங்களையும் சாதிக்க சிறந்த வழி தூய வாழ்வே. நாம் தூய வாழ்வு வாழ்கின்றோமோ என்று ஒவ்வொரு நாளும் இரவில் உறங்கச் செல்லுமுன் நம்மை நாமே பரிசோதிப்போம்.

**செபம்:**

ஆண்டவரே, எதிரிகளின் கையிலிருந்து திருச்சபையையும், எங்கள் நாட்டையும் காப்பாற்றும்.